**நீர்வளத் திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு**

நீர்வளத் திட்டத்தில் சேர்ந்து பயனடைய விவசாயிகளுக்கு சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் நாமக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள கருவாட்டாற்றில் (கரைபொட்டனார்) கால்வாய் பாசன விவசாயிகள் பயன்பெறும் வகையில் நீர்வளத்திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் கோவையில் உள்ள நீர்நுட்ப மையம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் நெல் வயல்களில் வயல் நீர் குழாய்கள் அமைத்தல் , பயறு வகைப் பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரித்தல், நஞ்சில்லாத பயிர் சாகுபடி கிராமங்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தின் மூலம் எண்ணெய் வித்துக்களை சாகுபடி செய்தல் ஆகிய தொழில் நுட்பங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. செயல் படுத்தப்படும் தொழில் நுட்பத்தைச் சார்ந்து விதை, உயிர் உரங்கள், நுண்ணூட்டச்சத்து உரங்கள், பயிர் வளர்ச்சி ஊக்கிகள் ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பயிற்சி வகுப்புகள் மற்றும் இடுபொருட்களான விதை, உயிர் உரங்கள், நீரில் கரையும் உரங்கள் மற்றும் சொட்டு நீர் பாசன உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன. எனவே கருவாட்டாறு (கரைபொட்டனார்) கால்வாய் பாசன பகுதியில் உள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் இணைந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு 0431 - 2614417 , **9944198709** என்ற தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

**திட்ட ஒருங்கிணைப்பாளர்**

**வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணி**